**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**2026 - ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 07- ம் நாள் சனிக்கிழமை**

**திருமதி. N.மீனாட்சி, B.A.B.L., மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் அவர்களால் உறுதிமொழி சட்டம் பிரிவு 105-வது ஏற்பாட்டின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

பெயர் : மாரியப்பன் அசல் வழக்கு எண்:16/2024

த/ பெயர் : ஈஸ்வரன் வாதி தரப்பு சாட்சி எண். 1

வயது : 30/2026

கிராமம் : என்.எம்.சுங்கம்

வட்டம் :

சமயம் :

தொழில் :பைனான்ஸ் வேலை

**பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் என்ன படித்துள்ளேன் என்ன தொழில் செய்கிறேன் என்றால் BSC படித்துள்ளேன். விக்னேஷ்வரா பைனான்சில் மேலாளராக வேலை செய்து வருகிறேன். பிரதிவாதி மாசிலாமணி என்ன வேலை செய்கிறார் என்றால் வேட்டைக்காரன்பூதூரில் கார்ப்பரேசனில் துப்புறவு தொழிலாளராக வேலை செய்கிறார். பிரதிவாதி என்னிடம் பணம் ரூ.1 லட்சம் எங்கு வைத்து வாங்கினார்என்றால் நான் வசூலுக்காக வால்பாறை வந்திருந்தபோது பிரதிவாதி பணம் வேண்டும் என்று கேட்டார். நான் வால்பாறையில் இருந்ததால் வால்பாறை வரச்சொல்லி வால்பாறையில் உள்ள யாழ் ஹோம்ஸ்டேயில் வைத்து கொடுத்தேன். எத்தனை மணிக்கு நான் பணம் கொடுத்தேன் என்றால் மாலை 04.30 மணியிலிருந்து 05.30 மணி இருக்கும். 03-12-2021-ம் தேதி பிரதிவாதி வேட்டைக்காரன்பூதூர் நகராட்சியில் பணியில் இருந்ததால் நான் சொல்லும் தேதியில், நான் சொல்லும் நேரத்தில் வால்பாறை வந்து என்னிடம் பணம் வாங்கவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்லும் தேதியில் பிரதிவாதி ரூ.1 லட்சம் பணம் தேவையில்லை என்பதால் புரோநோட்டு பிரதிவாதி எனக்கு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. உண்மையில் பிரதிவாதி மருத்துவ செலவிற்காக நான் வேலை செய்யும் விக்னேஷ்வரா ஆட்டோ பைனான்சில் 13-11-2020-ம் தேதி ரூ.60 ஆயிரம் வாங்கிக்கொண்டு இரண்டு வெற்று புரோநோட்டில் கையொப்பம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. பிரதிவாதி எங்களது ஆட்டோ பைனான்சில் வாங்கிய ரூ.60 ஆயிரத்தை வட்டியுடன் திருப்பி செலுத்திவிட்டார் என்றாலும், பிரதிவாதிக்கு படிப்பறிவு இல்லாததால் சிறிய நோட்டு போட்டு அதை வசூல் செய்து பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல. பணத்தை செலுத்திவிட்டு வெற்று புரோநோட்டை திரும்ப கேட்டபோது தேடி எடுத்துத்தருவதாக கூறிவிட்டு அதை வைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்ட பிரதிவாதி அதிர்ச்சி அடைந்து என்னிடம் வந்து நேரடியாக நான் வாங்கிய பணத்தை திருப்பி செலுத்திவிட்டேன் எ தற்கு என்மீது நோடீஸ் அனுப்பீனீர்கள் என்று கேட்டபோது நான் மிரட்டி அனுப்பிவிட்டேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு படிப்பறிவு இல்லாததால் சட்டஅறிவிப்பு பதில் அறிவிப்பு கொடுக்காமல் இருந்துள்ளார் என்றால் சரியல்ல. நானும் புரோநோட்டை எழுதியவரும் சேர்ந்து மோசடி செய்து பிரதிவாதியிடம் இருந்து பணம் வாங்கவேண்டும் என்பதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. புரோநோட்டை எழுதியது யார் என்று பிரதிவாதிக்கு தெரியாது என்றால் சரியல்ல. பிரதிவாதி 03-12-2021-ம் தேதியின் என்னிடம் பணம் வாங்கவில்லை அதற்காக புரோநோட்டு எழுதிதரவில்லை அதனால் தாவா பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. சரியான நீதிமன்ற கட்டணம் செலுத்தாமல் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு பிரதிவாதியின் செலவுதொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை:** இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி.N.மீனாட்சி
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.